உளவியல் நோக்கில் இரட்டைக்காப்பியப் பெண்மாந்தர்கள்

ஆய்வாளர்

பி.சுகன்யா

ஆய்வு நெறியாளர்

முனைவர்.ச.குருஞானாம்பிகா

முனைவர்பட்ட ஆய்விற்குரிய ஆய்வுச்சுருக்கம்

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர் - 43

நவம்பர் 2021

ஆய்வுச் சுருக்கம்

முன்னுரை

மனிதன் என்பவன் உடல், உள்ளம் இரண்டும் இணைந்து செயல்படும் ஓா் உயிரினம். உடலானது புறத்தே புலப்படுவது. உள்ளமானது உள்ளிருந்து செயல்படுவது. மனிதனின் ஒவ்வொரு செயலுக்குப் பின்னும் உள்ளமே மறைந்து நின்று செயல்படுகிறது. அத்தகைய உள்ளத்தை பல அறிஞர்கள் ஆராய முயன்றனர். அவ்வகையில் ∴பிராய்ட் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார். ∴பிராய்ட் வகுத்த உளவியல் பகுப்பு முறையை அடிப்படையாகக் கொண்டு உளவியல் இலக்கியங்கள் ஆராயப்படுகின்றன. மற்ற உளவியல் அறிஞர்களும் ∴பிராய்ட் உளவியல் பகுப்பு முறையை அடிப்படையாக வைத்தே பல கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். அவற்றால் உள்ளத்தைப் பற்றிய ஆய்வு மக்களிடையே வெகுவாகப் பரவியிருக்கிறது. இன்று அறிவியல் உலகில் உளவியல் தனித்துறையாகச் செயல்பட்டு வளர்ந்து வருகிறது.

இலக்கியம் மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாக அமைகிறது. பெரும்பாலும் இலக்கியங்கள் அனைத்தும் மனிதனின் மனதை வெளிப்படுத்துவதையே முதன்மையாகக் கொண்டிருக்கின்றன. இலக்கியத்திற்கும், உளவியலுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இலக்கியங்களில் இடம்பெறும் மாந்தர்கள், படைப்பாளியின் மனநிலையைப் பிரதிபலிப்பவர்களாகவே அமைந்திருக்கின்றனர். தமிழிலக்கியங்கள் அனைத்தும் மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாகவே உள்ளது. இலக்கியங்களில் பெரும்பான்மை உளவியல் அணுகுமுறையால் உருவாக்கபப்பட்டவையேயாகும். இரட்டைக்காப்பியங்கள் பெண்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட இலக்கியமாகும். சிலப்பதிகாரம், மணிமேகலைக் காப்பியத்தில் இடம்பெற்றுள்ள பெண்மாந்தா்களிடம் காணப்படக்கூடிய சிந்தனைத்திறன், செயல்பாடுகள், நடத்தைகள், ஆளுமைப்பண்புகள், மனவெழுச்சிகள், மனப்பான்மைகள் போன்ற உளவியல் தன்மைகளைக் கண்டறிவதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

ஆய்வுப்பொருள்

“உளவியல் நோக்கில் இரட்டைக்காப்பியப் பெண் மாந்தர்கள்”என்னும் பொருளில் ஆய்வு அமைகிறது.

ஆய்வு நோக்கம்

இரட்டைக்காப்பியம் பெண்மாந்தர்களின் மனநிலை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை அறிய உதவும் காப்பியங்களாகும். இக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ள பெண்மாந்தர்களின் செயல்கள், அவர்களின் வாழ்க்கையில் ஏற்படும் ஏமாற்றங்கள்,

தோல்விகள், மனப்போராட்டம் ஆகியவைப்பற்றி ஆய்வு செய்தால், இரட்டைக்காப்பியப் பெண்மாந்தர்களின் உளவியல் பண்புகளை வெளிக்கொணர முடியும் என்ற நோக்கத்தில் இவ்விரு காப்பியங்களும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

கருதுகோள்

மனிதனது நடத்தைக்கு முக்கியக் காரணம் மனமே ஆகும். அத்தகைய மனமானது, மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை தாம் வாழும் சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் மாறுபாடு அடைவதைக் கருதுகோளாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஆய்வு ஆதாரங்கள்

சிலப்பதிகாரம், மணிமேகலைக் காப்பியத்தை முதன்மை ஆதாரமாகக் கொண்டு இவ்வாய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது. பல உளவியல் அறிஞர்கள் எழுதிய உளவியல் நூல்கள், காப்பியத்திறனாய்வு நூல்கள், திறனாய்வுக்கட்டுரைகள், ஆய்வேடுகள் போன்றவை இந்த ஆய்வுக்குத் துணைமை ஆதாரங்களாக அமைகின்றன.

ஆய்வு முன்னோடி

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் 2009 ஆம் ஆண்டு வே.தனுஜா என்பவரின் "கம்பனின் முரணிய பாத்திரங்களின் உளவியல்" என்ற தலைப்பிலான முனைவர் பட்ட ஆய்வேடும், 2011 ஆம் ஆண்டு சு. வினோத் என்பவரின் "கம்பராமாயணப் பெண்பாத்திரங்களின் உளப்பகுப்பாய்வு" என்ற தலைப்பிலான முனைவர் பட்ட ஆய்வேடும் இவ்வாய்வின் முன்னோடி ஆய்வேடுகளாகக் கொள்ளப்படுகின்றன.

ஆய்வு எல்லை

இவ்வாய்விற்கு இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரமும், சீத்தலைச்சாத்தனார் இயற்றிய மணிமேகலையும் ஆய்வு எல்லையாக அமைகின்றன.

ஆய்வு அணுகுமுறை

உளவியல் நோக்கில் இரட்டைக்காப்பியப் பெண்மாந்தர்கள் என்னும் இவ்வாய்வில், பாத்திரப் படைப்புக்களின் உணர்வுகளை ஆராயுமிடத்தில் உளவியல் அணுகுமுறையும்,உளவியல் கருத்துக்களை விளக்குமிடத்தில் விளக்கமுறை ஆய்வும், இரட்டைக்காப்பிய சமூகத்தை ஆராயுமிடத்தில் சமூகவியல் ஆய்வுஅணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வுப் பகுப்புமுறை

இவ்வாய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவை,

இயல் - 1: உளவியலும் உளவியல் கோட்பாடுகளும்

இயல் - 2: தலைமைப் பெண்மாந்தர்களின் உளவியல்

இயல் - 3: துணைமைப் பெண்மாந்தர்களின் உளவியல்

இயல் - 4: பிறபெண் மாந்தர்களின் உளவியல்

இயல் - 5: இரட்டைக்காப்பிய சமூகம் அன்றும் இன்றும்

ஆய்வேட்டின் இறுதியில் ஆய்விற்குத் துணைநின்ற நூற்பட்டியல் இடம்பெற்றுள்ளன. இரட்டைக்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள பெண்மாந்தர்களின் பெயர் பட்டியல் பின்னிணைப்பில் இடம்பெற்றுள்ளன. முன்னுரையில் ஆய்வுத்தலைப்பு, ஆய்வுநோக்கம், ஆய்வுத்தரவுகள், ஆய்வு அணுகுமுறைகள், ஆய்வேட்டின் அமைப்பு முறை, ஆய்வுப்பயன், கருதுகோள் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

இயல் - 1 உளவியலும் உளவியல் கோட்பாடுகளும்

உளவியலானது மனித உள்ளம், உடல், உணர்ச்சிகள், நடத்தைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு அமையப் பெறுவதால் நடத்தைப் பற்றிய அறிவியல் என்று அறியப்படுகிறது. மேலைநாட்டில் தோன்றிய இந்த உளவியல் கோட்பாடானது தொடக்கத்தில் கலையாகத் தோன்றி, பின் அறிவியலாக வளர்ச்சி பெற்றது. புலனறிதல், கற்றல், நினைவாற்றல், சிந்தித்தல், பிரச்சினைக்குத் தீர்வு காணல், உணர்தல், வளர்தல், மற்றவரிடமிருந்து வேறுபடும் தன்மை, பிறரிடம் பழகும் முறை இவற்றை மேற்கொள்வதை அறிய உளவியல் பயன்படுகின்றது. உளவியல் என்னும் அறிவியலில் பல எண்ணற்ற துறைகள் அடங்கி இருக்கின்றன. உளவியல் கோட்பாடானது, தனிமனிதனின் சிந்தனை, உணர்ச்சி, நடத்தை போன்றவற்றை ஆய்வு செய்யத் துணைபுரிகின்றது.

உளவியல் கோட்பாடுகள் மனிதனின் மனதைப் புரிந்து கொள்வது பற்றியும் அவனுடைய நடத்தையைப் புரிந்து கொள்ளுதல் குறித்தும் எடுத்துரைக்கின்றன.

இருபதாம் நூற்றாண்டில் அறிவியல் வழியாக மனிதனைப் பற்றி ஆராய முனைந்த துறைகளுள் உளவியல் துறையும் ஒன்றாகும். மனிதனுடைய நடத்தையை (Behaviour) மனித மனமே நிர்ணயிக்கிறது என்று உணரப்பட்ட போது, மனித நடத்தைகளைப் புரிந்து கொண்டால் அவனது மனதைப் புரிந்து கொள்ளலாம் என்று தெளிவாக இருக்கின்றது.

அதன் அடிப்படையில் பல்வேறு கோட்பாடுகளும் உருவாக்கப்பட்டன. உளவியல் கோட்பாடுகளில் முக்கியமானவையாக,

1. **அமைப்புநிலைக் கோட்பாடு (Structuralism)**
2. **செயல்முறை நிலைக் கோட்பாடு (Functionalism)**
3. **நடத்தைக் கொள்கை (Behaviourism)**
4. **நோக்கக் கொள்கை (Purposirsm)**
5. **முழுநிலைக்காட்சிக் கொள்கை (Gestalt Psychology)**
6. **உளப்பகுப்புக் கொள்கை (Psycho analysious)**

ஆகியவை அறியப்படுகின்றன.

மனித மனதை மேற்காணும் ஆறு நிலைகளில் உளவியலாளர் பகுத்துப் பல நுட்பமான நிலைகளிலும் ஆய்வு செய்கின்றனர். இக்கோட்பாட்டின் அடிப்படையில் இரட்டைக்காப்பியப் பெண்மாந்தர்களின் உளவியல் பண்புகள் இவ்வியலில் எடுத்துரைக்கப்படுகின்றன.

இயல் 2 தலைமைப் பெண் மாந்தர்களின் உளவியல்

காப்பியத்தின் உயிரோட்டம், காப்பிய மாந்தர்களின் உயிரோட்டத்தைப் பொறுத்தே அமைகிறது. ஒரே வகையான மாந்தர்களைப் படைப்பதை விட, வெவ்வேறு வகையான மாந்தர்களைப் படைப்பதே காப்பியத்திற்குச் சிறப்பானதாகும். நிலையான பண்பினராக அன்றி, வளரும் இயல்பினையுடையவராகக் காப்பியத்தில் தலைமை மாந்தர்கள் பண்புநிலை அறியமுடிகின்றது. இந்த மாந்தர்கள், சூழ்நிலைகளுக்கேற்பச் செயற்படுவதும் குறிப்பிடத்தக்கது. இரட்டைக்காப்பியம் என்பது தனி மனிதனின் அகச்சிக்கலில் உருவான வீழ்ச்சியைப் பற்றி மட்டும் கூறுவதன்று, சமூகம் - மனிதன் என்ற இருநிலைகளைப் பற்றியும் கூறுகிறது. இதற்கும் மேலாக, சூழ்நிலைக்கேற்ப மாறும் மனித மனங்கள், மனிதனின் ஆன்மீகக்கோட்பாடு, அகப்புறச் சிக்கல்கள், உணர்வுப்போராட்டம் போன்றவற்றை முழு அளவிலும், வெளிப்படையாகவும் காட்டுகிறது.

இரட்டைக்காப்பியத் தலைமைப் பெண்மாந்தர்களான கண்ணகி, மாதவி, மணிமேகலை நடத்தையைத் தீர்மானிக்கும் காரணிகளாக அவர்களின் உளவியல் பண்புகள் காணப்படுகின்றன. பண்பு என்ற சொல்லிற்கு **“குணம், தகுதி, இயல்பு, முறை, மனத்தன்மை, செய்கை, அழகு, விதம் எனப் பல பொருள்கள் சொல்லப்படுகின்றன. நலன் என்ற சொல்லும் நலம் என்ற சொல்லும் ஒன்றேயாகும். இச்சொல்லிற்கு சுகவாழ்வு,இன்பம், அழகு, பயன், புகழ், உயர்வு, உதவி, கண்ணோட்டம்” (வர்த்தமானன் தமிழ் அகராதி, ப.696)** எனப் பல பொருள் சொல்லப்படுகின்றன. கண்ணகி, மாதவி, மணிமேகலையின்

உளவியல் பண்புகள் அவர்கள் வாழக்கூடிய சூழ்நிலைக்கு ஏற்ப நன்மை உடையதாகவோ, தீமை உடையதாகவோ மாறுபட்டுக் காணப்படுகின்றன. இலக்கியமானது, மனிதனைப் பற்றியும், மனிதச்சிக்கல்கள் பற்றியும் அமைதல் வேண்டும். இப்படிப் படைக்கப்பட்ட இலக்கியம் இரட்டைக்காப்பியங்கள் என்று குறிக்கப்படுகின்ற சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை ஆகும்.

இரட்டைக்காப்பியம் முழுக்க முழுக்க மனிதப் பிரச்சனைகளைப் பற்றியே கூறுகிறது. இரட்டைக்காப்பியத்தில் பெண்பாத்திரங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. சிலம்பில் தொடக்கத்திலிருந்து இறுதிவரை இடம்பெற்றுள்ள பாத்திரமாக கண்ணகி அறியப்படுகிறாள். மாநாய்கனின் தவப்புதல்வியாம். கண்ணகி சோழ நாட்டுப் புகார் நகரில் பிறந்தவள். திருமகளைப் போன்ற வடிவும், அருந்ததிப் போன்ற கற்புத் திறனும் உடையள். தனது 12ஆம் வயதில் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்டத் திருமணத்தை ஏற்று இல்லறவாழ்க்கையை வாழ்ந்தவள். மாதரார் தொழுது வழிபடக்கூடிய உயர்ந்த நற்குணங்கள் நிரம்பியவள். கோவலன் பொருள் ஈட்டுவதற்காக மதுரை மாநகருக்குச் செல்கிறான். அப்போது கோவலனுடன் சென்ற கண்ணகி தன் கற்பு நெறியால் கணவனுக்காக வாதிட்டதை மதுரையில் பறைசாற்றி, சேர நாட்டு வஞ்சி நகரத்தில் பத்தினித்தெய்வமாகிறாள். காப்பியம் முழுவதும் கண்ணகியை மையமாகக் கொண்டே இயற்றப்பட்டுள்ளது. இக்காப்பியத்தொடக்கத்தில் கண்ணகியின் பாத்திரப்படைப்பானது பெண்களுக்கே உரிய அச்சம், மடம், நாணம் போன்ற பண்புகளோடு இளங்கோவடிகள் அறிமுகம் செய்கின்றார். கோவலன் தன்னை விட்டு, மாதவியிடம் சென்று வாழக் கூடிய காலத்தில் பொறுமை, பொறுப்பு, சகிப்புத்தன்மைக் கொண்டு கணவனுக்காக வாழும் பெண்ணாகத் திகழ்கின்றாள். வணிகக் குடியில் பிறந்து, பாண்டிய மன்னனுக்கே நீதியைக் கற்பிக்கும் ஆற்றல் மிக்கப் பெண்ணாக உயர்கிறாள். கண்ணகித் தன் மனதில் தோன்றும் எண்ணங்களை வெளிப்படுத்தும் தன்மை காப்பியம் முழுவதும் வெளிப்படுகின்றது.

மனிதனின் ஆளுமையானது, உருவ ஆளுமை, உள்ள ஆளுமை என இருவகைப்படுகிறது. ஒரு தனிமனிதனின் உருவ ஆளுமையை நிர்ணயிக்கும் காரணிகளுள், அவனின் புறத்தோற்றம் முக்கியப் பங்கு வகிக்கிறது. இளங்கோவடிகள் கண்ணகியின் புறத்தோற்றம் குறித்து கூறுகையில், திருமகள் உருவத்தை ஒத்தத் தன்மையை உடையவளாகவும், அவளது கற்புநெறியைக் கூறுகையில், அருந்ததியின் கற்பை ஒத்த திறமுடையவளாகவும் சிறப்பித்துக் கூறுகிறார். அதனை,

“அவளுந்தான்
போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்

மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்

காதலார் பெயர் மன்னுங் கண்ணகியென் பாள்மன்னோ" (மங்.வா.பா.25- 29)

என்ற பாடலடிகளின் வாயிலாக கண்ணகியின் சாயல், கற்புத்திறம் ஆகியவற்றை அறிய முடிகின்றது. கண்ணகி புறத்தோற்றத்தில் மட்டுமல்லாது, அகஉணர்வுகளாலும் தனித்தன்மை வாய்ந்தவளாகத் திகழ்கின்றாள். சிலப்பதிகாரரக் காப்பியம் முழுவதும் கண்ணகியின் பாத்திரமானது, மனவெழுச்சி மிக்கப் பாத்திரமாகப் படைக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது.

மனிதனின் உடலிலுள்ள உணர்வுகள் முழுவதும் எழுச்சி பெற்றுச் செயற்படுகின்ற நிலை மனவெழுச்சி என்று அறியப்படுகின்றது. அத்தகைய மனவெழுச்சிக்கு எண்ணற்ற காரணிகள் உள்ளன. அவற்றைப் பொதுவாகப் புறக்காரணிகள் என்றும், அகக்காரணிகள் என்றும் வகைப்படுத்தலாம். மனவெழுச்சி,

- இனிமையானவை
- இனிமையற்றவை என இருவகைப்படும்.

மனவெழுச்சியைக் கட்டுபடுத்த ஒருவன் முதலில் தன்னைத் தானே கட்டுப்படுத்தவும், தன் புலன்களை அடக்கி ஆளவும் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வடிப்படை மனவெழுச்சிகள் அடிப்படைச் செயல்பாடுகள் எனக் குறிப்பிடப்படுகிறது. உளவியலார் பொதுவாக ஒருவனிடம் பிறப்பால் அமையும் மெய்ப்பாடுகள் அச்சம், சினம், மகிழ்ச்சி எனக் கருதுகிறார்கள். இந்த அடிப்படை மனவெழுச்சியைக் கண்ணகியின் உளவியல் கூறோடு ஒப்புநோக்கி அறியமுடிகிறது.

மாதவி

சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற இரு காப்பியத்திற்கும் வலுசேர்க்கும் விதமாக மாதவியின் பாத்திரம் இடம்பெற்றுள்ளது. மாதவி கண்ணகிக்கு இணையாகக் கற்பிலும், ஒழுக்கத்திலும், பண்பிலும், துறவு நிலையிலும் சிறந்து விளங்கியவள். தன் ஆடல், பாடல், அழகு ஆகியவற்றால் கோவலனைக் கவர்ந்து ஈர்த்துக் கொண்டவள். மன்னன் எதிரில் ஆடல் புனைந்து 'தலைக்கோல்' பட்டம் பெற்றவள். கணிகையர் குலத்தில் பிறந்த மாதவி கோவலன் ஒருவனையே இறுதிவரையில் கணவனாக நினைத்து வாழ்ந்தவள். கோவலன் இறந்த பின்பு துறவு வாழ்வு மேற்கொண்டு மணிமேகலை என்ற குறிக்கோள் மகளைப் பெற்றவள்.

மாதவியின் அறிவு ஆளுமை (Intellectual Personality)

மாதவி சித்ராபதியின் மகள். கணிகையர் குலத்தில் பிறந்தவள். ஆயினும் பரத்தையர் குலத்திற்குரிய ஒழுக்கங்களைக் கொண்டு வாழாமல் ஒருவனுக்கு ஒருத்தி என்ற ஒழுக்கத்தில் வாழ முயன்று வெற்றி பெற்றவள். அவளுடைய உளவியல் பண்பானது நுண்ணறிவு மிக்கதாகவும், சிந்தனைத் திறன் வாய்ந்ததாகவும்

அமைந்திருப்பதைக் காப்பியம் வழி காணமுடிகின்றது. புதியதாக ஏதேனும் ஒரு செயலை அறிந்து கொள்ள ஆர்வம் காட்டும் தன்மையே அறிவு ஆளுமை எனப்படும். ஒருவரின் அறிவுப் புலமையை அவர்களது நடத்தைகள் மற்றும் சொல்லாற்றலின் வழி அறிந்து கொள்ளமுடிகின்றது. பகுத்துணர்ந்து ஒரு செயலினைச் சிறப்பாக செய்கின்ற முறையே அறிவு ஆளுமை (Intellectual Personality) எனப்படும். மாதவி சிறுவயதிலேயே ஆயகலைகள் அனைத்தையும் முறைப்படி கற்றுத் தேர்ந்தவள். கலையோடு சேர்ந்த அழகு மிக்கவளாகத் திகழ்ந்தாள். பரத்தையர் குலத்தில் தோன்றிய மாதவி தன் குலஒழுக்கத்தை விடுத்து ஒருவனுக்கு ஒருத்தி என்ற இல்லற நெறியில் வாழ விருப்பமுடையவளாகவே காணப்படுகின்றாள். கோவலன் தன்னை விட்டுப் பிரிந்த நிலையில் துறவறத்தை ஏற்க விரும்புகின்றாள். மாதவி தனது நுண்ணறிவுத்திறனால், சமூகத்தைப் பிரிந்து சூழலுக்கு ஏற்ப செயல்படுகின்ற செயல்திறன் மிக்கவள். அவளது சிந்தனைத்திறன், ஆராய்ந்து அறியும் ஆற்றல், கடலாடு காதையில் தொடர்புபடுத்தி உரைக்கின்ற பேசாற்றல் ஆகியவை அவளது அறிவுத்திறன் வளர்ச்சியைப் புலப்படுத்துகின்றன. மேலும் தன்னையும் தன் மனதையும் தற்காத்துக் கொள்கின்ற திறன் படைத்தவளாக விளங்குகின்றாள். தனது சூழல்களைத் தடுமாற்றம் இல்லாது தன்னிலை அறிவுடன் உணர்ந்து செயல்படுகின்ற தன்மை உடையவளாகத் திகழ்கின்றாள்.

“மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை
அருந்தவப் படுத்தல் அல்ல தியாவதும்
திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்” (மணி.ஊர்.அ.கா.55-57)

என்ற பாடலடிகள் வாயிலாக மாதவி தன் குலத்தொழிலை வெறுத்தத் தன்மையை அறியமுடிகின்றது. மாதவியின் தாய் சித்ராபதி, ஊர் மக்களின் அலரைக் கூறி மணிமேகலையைக் கணிகையர் தொழிலில் ஈடுபடுத்த பல முயற்சிகளைச் செய்கிறாள். ஆனால் மாதவி தன் குலஒழுக்கத்தைப் பின்பற்றாமல் அறத்தை மேற்கொள்ளக் கூடிய பெண்ணாக தன் மகள் மணிமேகலையை வளர்க்க விரும்பி, இந்திர விழாவில் மணிமேகலையைக் கலந்துகொள்ள அனுமதி மறுத்தாள். இதனால் மணிமேகலையைத் துன்பக் கடலில் சிக்கித் துயருறாமல் காக்க அவளது அறிவுத்திறன் சிறப்பாக செயல்பட்டதைக் காணமுடிகின்றது.

மணிமேகலை

கோவலன், மாதவியின் மகள். மணிமேகலை தாயின் விருப்பத்திற்கேற்ப, பௌத்த சமயத் துறவியாகத் துறவறம் பூண்டவள். முற்பிறப்பின் வினையால் உதயகுமாரனிடம் தன் மனம் செல்வதைத் தடுக்க முயல்கின்றாள். பிறகுத் தன் விருப்பப்படியே புத்தத் துறவியாகி மக்களின் பசியைப் போக்குவதையே தன் கடமையாகக் கொண்டு வாழ்ந்தாள். சிறைக் கோட்டத்தினை அறக்கோட்டமாக மாற்றியவள். இராசமாதேவி தன் மகன் இறப்பிற்கு மணிமேகலையே காரணம் என்று எண்ணி பலத் துன்பங்களை அளித்த

போதும், அதனை எல்லாம் பொறுமையுடன் தாங்கிக் கொண்டத்தன்மை உடையவள். பிற சமயத்தை அறிந்து கொள்ள ஆர்வமுடையவளாகவும் விளங்கினாள். மணிமேகலை அழகும், இளமையும் வாய்ந்தவள். தான் பிறந்தது கணிகையர்குலம் என்றாலும், அதை மறந்து உயிரின் சிறந்த பண்பு அன்பு செலுத்துதல் என்பதைக் கடமையாகக் கொண்டு வாழ்ந்தாள்.மாதவியும், மணிமேகலையை மரபு வழியான கலையில் ஈடுபடுத்தாமல் அன்பில், அறத்தில் திளைக்கக் கூடிய மாண்புக்குரியவளாகவே வளர்த்து வந்தாள். மணிமேகலை பௌத்த நெறியில் பெண்ணாலும் துறவு கொண்டு பற்றற்ற வாழ்க்கை வாழ இயலும் என்பதை நிரூபித்துள்ளாள். மாதவியின் மகளாகப் பிறந்தாலும் கண்ணகியின் கற்புநெறியை ஒத்தத் தன்மையுடையவள் என்பதை,

“மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை
அருந்தவப் படுத்தலல்ல தியாவதும்
திருந்தாச் செய்கைத்தீத் தொழிற் படாஅள்” (மணி.ஊர்.அ.உ.கா.55-57)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. இதன் வாயிலாக அருந்ததியின் கற்பினை ஒத்த கண்ணகியின் கற்பிற்கு நிகரானக் கற்பினைப் பெற்றவள் மணிமேகலை என்பதை அறியமுடிகின்றது. அவளது வாழ்வில் ஏமாற்றமும், மனநிம்மதியற்ற செயல்களும் நிகழ்ந்திருந்தாலும் பற்றற்றதாக உள்ளம் இருக்கிற போதெல்லாம் அதை புதுமையாக மாற்ற முடியும் என வாழ்ந்து காட்டியவள் மணிமேகலை என்பதைக் காப்பியம் வழி அறியமுடிகின்றது.

இயல் - 3 துணைமைப் பெண்மாந்தர்களின் உளவியல்

காப்பியம் வெற்றி பெற பல்வேறு கூறுகள் வேண்டும். அவற்றில் பாத்திரப் படைப்பு முக்கிய இடம் வகிக்கிறது. ஒவ்வொரு காப்பியத்திலும் தலைவன் அல்லது தலைவியுடன் துணைப்பாத்திரங்கள் நன்முறையில் கட்டுக்கோப்புடன் இணைக்கப்பட வேண்டும். இலக்கியத்தில் தலைவன், தலைவி ஆகிய இருவரும் தலைமை மாந்தராக இருப்பதற்கும், அவர்களின் சிறப்பை விளக்கிக் காட்டுவதற்கும், காப்பிய நிகழ்வுகளை நடத்திச் செல்வதற்கும் துணைமை மாந்தர்கள் படைக்கப்படுகின்றார்கள். இம்மாந்தர்கள் காப்பியத்தில், கதை நிகழ்வோடு தொடர்புள்ளவர்களாகவும், தலைமை மாந்தர்களை மேம்படுத்துபவர்களாகவும் அமையப்பெறுகின்றனர். துணைமை மாந்தர்கள், தங்களின் பண்புகளால், உணர்வுகளால், செயல்களால் இரட்டைக்காப்பியங்களில் இடம்பெற்றுள்ளனர். சிலப்பதிகாரத்தில் தேவந்தி, கவுந்தியடிகள், மாதரி, கோப்பெருந்தேவி ஆகியோரும், மணிமேகலையில் சுதமதி, இராசமாதேவி ஆகியோரும், இரு காப்பியங்களில் சித்ராபதியும் இடம் பெறுகின்றனர். இவர்கள் வாயிலாக துணைமைப் பெண் மாந்தர்களின் உளவியல் பண்புகள் இங்கு ஆராயப்பட்டுள்ளன.

சித்திராபதி

சித்திராபதி மாதவியின் தாய். பரத்தையர் குலத்தில் பிறந்தவள். பரத்தையர் குலத்திற்கேற்ற குல ஒழுக்கங்களைத் தவறாது கடைபிடிப்பவள். தன் மகளையும் குலஒழுக்கத்திற்கு ஏற்றாற்போல் வளர்க்க எண்ணுகிறாள். ஆயினும் மாதவி ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலையில் வாழ எண்ணுகிறாள். கோவலன் இறந்த பின்பு தானும் பௌத்த சமயத்தைத் தழுவி, தன் மகளையும் துறவு வாழ்வை மேற்கொள்ளச் செய்கிறாள். இச்சூழலில் குலஒழுக்கத்திற்கு ஏற்றாற்போல், அவர்களை மாற்ற எண்ணும் சித்திராபதியின் செயற்பபாடுகள் அவளது உளவியல் பாங்கினை அடையாளப்படுத்துகின்றன.

உளத்தற்காப்பு நிலைகள்

சித்திராபதியின் சொற்களில் உளத்தற்காப்பு நிலைகளைக் காணமுடிகிறது. உளவியலார் "ஒரு நிகழ்வு முடிவாக இரண்டு நிலையை அடைகின்றது. ஒன்று இன்பநிலை, மற்றொன்று துன்பநிலை" (முனைவர். பெ. வெங்கட்டம்மாள், பொதுஉளவியல், ப.129) என்று குறிப்பிடுவர். இன்பநிலையை உள்ளம் இயல்போடும், மகிழ்வோடும் ஏற்றுக்கொள்ளுகிறது. ஆனால் துன்பநிலையை அடைய உள்ளம் மறுக்கும். துன்பமான நிகழ்வு தன்னைத் தாக்காத வண்ணம் பாதுகாத்துக் கொள்ள உள்ளம் எண்ணுகிறது. இந்நிலையால் ஏற்படும் விளைவுகளை உளவியலார் உளத்தற்காப்பு இயங்கு முறைகள் என்கிறார்கள். உளத்தற்காப்பு இயங்குமுறைகளின் வகைகளாக,

"1. உள்ளப்போராட்டம்
2. துறப்பமைவு
3. ஈடுசெய்தல்
4. சமூகநிலை முறிவு
5. அறிவார்ந்த செயல்
6. உயர்வு மனப்பான்மை"

(தா.ஏ.சண்முகம், உளவியல் இரண்டாம் பாகம், ப.225)

ஆகியவற்றைக் குறிப்பிட முடிகிறது. சித்திராபதியின் உளப்பாங்கானது உள்ளப்போராட்டம், துறப்பமைவு, ஈடுசெய்தல், சமூகநிலை முறிவு, அறிவார்ந்த செயல் போன்ற உளத்தற்காப்பு இயங்குமுறைகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது.

தேவந்தி

சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்குத் தோழியாகத் தேவந்தி இடம் பெற்றுள்ளாள். கண்ணகி, தேவந்தி இருவருமே கணவனைப் பிரிந்தநிலையில் தனிமையில் துயருற்று வாழ்ந்து வருகின்றனர். தேவந்தி கண்ணகியின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து அன்போடு பழகும் தன்மை உடையவளாகக் காணப்படுகின்றாள். பிறர்நலனில் அக்கறைக்

கொள்ளும் மனப்பான்மை உடையவளாக தேவந்தி அமைகிறாள். கோவலனைப் பிரிந்து துன்புறும் கண்ணகியை ஆற்றுப்படுத்தும் விதமாக தேவந்தியின் உளப்பாங்கு அமைகிறது.

தேவந்தியின் உளப்பாங்கினை,"சமுதாய உளப்பாங்கு, தனிமனித உளப்பாங்கு"என்ற இருநிலைகளில் ஆராய இயலுகின்றது.

மனப்பக்குவம்

தேவந்தி பாத்திரம் மனப்பக்குவம் உடைய பாத்திரமாக அமைந்துள்ளது. **"மனப்பக்குவம் மானம் காக்கும் என்பார்கள். பக்குவமாகப் பேசுபவர்கள், நடந்து கொள்பவர்கள் அனைவராலும் மதிக்கப்படுகிறார்கள். மனப்பக்குவத்திற்குள் பொறுப்புணர்ச்சி, தன்னம்பிக்கை, தன்னடக்கம், தன்கட்டுப்பாடு,உழுவலன்பு முதலியன அடங்கும் என்பர்"(உளநலவியல், ப - 26)** தேவந்தியிடம் அதிகமான பொறுப்புணர்ச்சி காணப்படுவதை,

"தேவந்தி யென்பாள் மனைவி அவளுக்குப்
பூந்த வுண்கண் பொறுக்கென்று மேவித்தன்
மூவா இளநலங் காட்டிளம் கோட்டத்து"(சிலம்பு.கனா.தி.உ.கா.33-36)

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. தேவந்தி தன் கணவன் பாசண்டசாத்தான் இறைத்தன்மை உடையவன் என்பதனை அறிகிறாள். இப்பூலக வாழ்வின் இன்பங்களை விடுத்து விரைவில் எம் கோட்டத்திற்கு வந்து சேர்வாயாக என்ற கணவனின் கூற்றினை உணர்ந்து செயல்படும் மனப்பக்குவம் உடையவளாக தேவந்தி அமைகிறாள்.

கவுந்தியடிகள்

சிலப்பதிகார மாந்தர்களுள் குறிப்பிடத்தக்க மாந்தராக விளங்குபவர் கவுந்தியடிகள். இவரது கொள்கைகள் கோட்பாடுகளை விட மாண்பு உடையது என்பதை அடையாளப்படுத்தும் ஆற்றல் உடையவராகப் படைக்கப்பட்டுள்ளார். இவர் மனிதநேயத்திற்கும் சமயப்பிடிப்புக்குமிடையே போராடுகின்ற மனஆளுமை (Mental Personality) பெற்ற மாந்தராக அமைவதனைக் காணமுடிகிறது. மேலும் தன் நுட்பமான மனத்திறனால் பிற மாந்தர்களை நெறிப்படுத்துகின்ற ஆற்றல் உடையவராகவும் திகழ்கின்றார்.

கவுந்தியடிகள் தோளில் உறியும் ஒரு கையில் பிச்சை மண்டையும், மற்றொரு கையில் மயிற்பீலியும் ஏந்தி, ஐந்தெழுத்து மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு வாழக்கூடிய தன்மை உடையவர். கவுந்தியடிகள் சமணப்பள்ளி அமைத்து அதில் வாழ்ந்து வந்தார். இவர் பிற மாந்தரால் தனக்கு ஏற்பட்ட சூழலையும் ஏற்று, தன் கருத்திற்கு ஏற்றாற் போல் மாற்றிக் கொள்ளும் மனவலிமையினையும் பெற்றவர். தனது அதீத மனவெழுச்சியினை, மற்ற மாந்தர்களிடம் புலப்படுத்துகின்ற திறனுடையவர். சூழலுக்கு

ஏற்ப மாறுபடுகின்ற மனப்பான்மை பெற்றவர். பிறமாந்தர்களை நெறிப்படுத்துகின்ற ஆளுமை மிக்கவராகவும் திகழ்கிறார்.

மாதவி

மாதவி ஆயர்குலத்தைச் சேர்ந்தவள். திருமாலை வழிபடுபவள். கோவலன், கண்ணகி ஆகிய இருவரையும் அடைக்கலப் பொருளாகப் பெற்றவள். புறஞ்சேரியிலுள்ள பசுமையான அருட்பார்வையினை உடைய இயக்கிக்குப் பாற்சோறு படைத்து விட்டு வரும் வழியில் கவுந்தியடிகளைக் கண்டு அவரது திருவடிகளைத் தொட்டு வணங்கினாள். இந்நிகழ்வின் மூலம் வயது முதிர்ந்த மாதரி சிறந்த பக்தியுடையவள், சமயப்பற்று அற்றவள், பணிவும் பண்பும் கொண்டவள், ஆயர் குலத்திற்கே தாய் போன்றவள் என்பதை அறியமுடிகிறது. மாதரி தன் வீட்டில் அடைக்கலமாகத் தங்கி இருந்த கோவலன், கண்ணகியின் மீது மிகுந்த அன்பு உடையவளாகத் திகழ்கின்றாள். அவ்விருவரும் இன்புற்று வாழத் தன் வீட்டில் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து உதவும் பண்புடையவளாக இருக்கின்றாள். தன்னிடம் அடைக்கலமாக வந்த கோவலன், பாண்டியனின் தவறான தீர்ப்பால் உயிர் இழந்தான் என்ற செய்தியை அறிந்த மாதரி சோகமிகுதியால் மனஅழுத்தம் கொண்டு தன் உயிரையும் மாய்த்துக் கொள்ளக் கூடிய மனநிலையை அடைவதனை,

“அடைக்கல மிழந்தேன் இடைக்குல மாக்காள்
குடையும் கோலும் பிழைத்த வோவென
இடையிரு ளியாமத் தெரியகம் புக்கதும்”(நீ.ப.கா. 76 -78)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. மாதரி தன்னிடம் அடைக்கலமாக வந்த மக்களைக் காக்க தவறினோம் என்ற குற்ற உணர்வினால் கண்ணகிக்கு ஏற்பட்ட நிலையைக் கண்டு தன் உயிரையும் மாய்த்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணமுடையவளாக மாறியமையை அறியமுடிகின்றது. மாதரி நெருப்புமூட்டி அதனுள் இறங்கித் தன் உயிரைப் போக்கக் கூடிய அளவிற்கு மனப்பிறழ்விற்கு ஆளாகி இருப்பதை அறியமுடிகின்றது. அவள் கடமையும், வாக்குறுதியுமே முக்கியமானவை எனக் கருதுகிறாள். இங்கு மதத்தைக் காட்டிலும் மனிதநேயமே முதல் இடம் பெறுகிறது.

கோப்பெருந்தேவி

தென்னவன் பாண்டிய நெடுஞ்செழியனின் காதல் மனைவி கோப்பெருந்தேவி. அக்காலத்தில் கணவன் இறந்தவுடன் மனைவியும் இறத்தல் சிறந்த கற்பாகப் போற்றப்பட்டது. அதற்கு எடுத்துக்காட்டாக கோப்பெருந்தேவி விளங்கினாள். கற்புச் செயலால் காப்பியத் தலைவிக்கு நிகராகக் கருதப்படுபவள். கற்புடைய பெண்டிர், தெய்வம் தொழாமல் கொழுநனைத் தொழுவார் எனத் தமிழ்மறை கூறுகிறது.

சுதமதி

சுதமதி முற்பிறப்பில் 'வீரை' என்னும் பெயருடையவளாக இருந்தாள். அவள் அரசிளங்குமரியும் ஆவாள். துச்சயன் என்ற மன்னனின் மனைவி, மதுவுண்ட மயக்கத்தால் யானை முன் செல்ல அதனால் இறந்துபட்டாள். மறுபிறப்பில் சண்பை நகரில் கௌசிகன் என்னும் அந்தணனின் மகளாகப் பிறந்தவள். நல்ல சொல்வன்மையும், இடமறிந்து நலமுரைக்கும் தன்மையுமுடையவள்.

சுதமதியின் உளவியல் பண்புகள்

சுதமதி மணிமேகலையின் தோழி. பிறருடன் எளிதாகப் பழகுதல் அனைவருடனும் நல்லுறவு கொண்டிருத்தல் போன்ற புறநோக்காளரின் இயல்புகளைப் பெற்றவளாக சுதமதி அமைந்துள்ளாள். அவளது உளப்பாங்கானது,

1. **“விழிப்பாக இருத்தல் எளிதாகப் பழகுதல்**
2. **செயல் துடிப்புடன் இருத்தல்**
3. **மாறுதல்களை விரும்புதல்**
4. **எந்த நிலைக்கும் தன்னைச் சரிக்கட்டிக் கொள்ளுதல்**
5. **தன் உணர்ச்சிகளைப் பிறர்க்குப் புலப்படுத்துதல்**
6. **கலகலப்பாகப் பேசுதல்**
7. **பிறர்மேல் காரணமற்ற வெறுப்பு இல்லாமை**
8. **மாறுபட்ட பாலினருடன் சுமுகமாகப் பழகுதல்**

உற்சாகமாக இருத்தல்” (குமரஉள்ளம்,மு.அறம், தமிழ்வெளியீட்டுக் கழகம், ப.17)

ஆகிய பண்புகளின் அடிப்படையில், விழிப்பாக இருத்தல், எளிதாகப்பழகுதல், செயல்துடிப்புடன் இருத்தல், மாறுதல்களை விரும்புதல், உற்சாகமாக இருத்தல் ஆகியவை சுதமதியின் உளவியல் பண்போடு பொருந்தக் கூடியதாக அமைந்திருக்கின்றன.

இராசமாதேவி

மாவண்கிள்ளியின் பட்டத்தரசி சீர்த்தி ஆவாள். அவள் மாவலி மரபைச் சார்ந்த அரசமரபில் பிறந்தவள். உதயகுமரனின் தாய். இராசமாதேவி பாத்திரம் கயமை குணம் உடையதாகவும், மணிமேகலையை அடிமைப்படுத்தும் தன்மையுடையதாகவும் திகழ்கிறது. இராசமாதேவி தன்னுடைய மகனை இழந்ததால், மிகுந்த துன்பத்திற்கு ஆளாகிறாள். தன்னுடைய உணர்வு மட்டுமே அவளுக்கு முதன்மை வாய்ந்ததாகத் தெரிகிறது. விருப்பம் இல்லாத பெண்ணை, வலிந்து அடைய விரும்பி தன் மகன் செய்தது சரியா? தவறா? என்று எண்ணிப் பார்க்கும் மனநிலை அவளிடம் இல்லை. மகனின் இழப்பிற்குக் காரணமான மணிமேகலையை, எவ்வகையிலாவது பழிதீர்க்க வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே கொண்டவளாக

இராசமாதேவி திகழ்கிறாள் என்பதை உளவியலாரின் கோட்பாட்டின் வழி ஆராயஇயலுகின்றது.

இயல் 4 பிறபெண் மாந்தர்களின் உளவியல்

பெருங்காப்பிய இலக்கியங்கள் பலதரப்பட்ட கதை மாந்தர்களைப் பெற்றிருப்பது அவசியமானதொரு கூறாக அமைகிறது. பல்வேறு கதாபாத்திரங்களின் மூலம், சமுதாயத்தில் காணப்படும் பல்வேறு நிலைகளைப் படைத்துக் காட்ட படைப்பாளியால் இயலும். முதன்மைப் பெண் மாந்தர்கள், துணைமைப் பெண் மாந்தர்கள் ஆகியோரின் செயல்கட்குத் துணைநிற்கும் வகையிலோ, தான் விரும்பும் கருத்தை உலகிற்கு உணர்த்த விரும்பும் தன்மையிலோ பிற பெண் மாந்தர்கள் படைப்பாளிக்கு துணைநிற்பதை, இரட்டைக்காப்பிய பெண் மாந்தர்கள் வாயிலாகக் காணமுடிகிறது. இரட்டைக்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள பிற பெண் மாந்தர்களில், சிலர் பெயர் குறிப்பிடாதப் பாத்திரங்களாகவே காணப்படுகின்றனர். சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் தாய், கோவலனின் தாய், கூனி (சித்திராபதியின் பணிப்பெண்), வம்பப்பரத்தை, காவற்பெண்டு, அடித்தோழி, வனசாரினி, ஆயமகள், காதலரைப் பிரிந்த புகார்ப்பெண்டிர், மதுராபதித் தெய்வம், கணவனால் கைவிடப்பட்ட பார்ப்பினி, பொய்சாட்சி கூறியவனின் தாய் என பெயர் குறிப்பிடப்படாத பெண் மாந்தர்கள் இடம்பெற்றுள்ளனர். மேலும் நீலி, ஐயை, கார்த்திகை, மாலதி, வேண்மாள், சாலி போன்ற பெயர் குறிப்பிட்ட பெண்மாந்தர்களும் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளனர். மணிமேகலைக்காப்பியத்தில் மருதி, விசாகை, சாலி, வயந்தமாலை, காயசண்டிகை, தாரை, வீரை, இலக்குமி, ஆதிரை போன்ற பெண் மாந்தர்கள் பிற மாதர்களாக இடம்பெற்றுள்ளனர். இரட்டைக்காப்பிய பிற பெண் மாந்தர்களின் உளவியல் பண்பானது மறுபிறவியை நினைவுறுத்தும் விதமாகவும், கற்பினை வலியுறுத்தும் விதமாகவும், இரக்கச் சிந்தனை மிக்கவராகவும் அமையப்பெற்றிருப்பதை இவ்வியல் வழியாக அறியமுடிகின்றது.

இயல் 5 இரட்டைக்காப்பியச் சமூகம் அன்றும் இன்றும்

சமூகம் என்பது ஒத்த பழக்கங்கள், உறவுகள், மதிப்புகள் போன்றவற்றில் பொதுத்தன்மையும், செயல் ஒருமைப்பாடும் கொண்ட மக்கள் வாழ்கின்ற அமைப்பாகும். அத்தகைய சமூக அமைப்பானது இரட்டைக்காப்பியத்திலும், இன்றையச் சூழலிலும் பொருந்திப்போகும் தன்மைகளையும், வேறுபடக்கூடியத் தன்மைகளையும் ஆராயக்கூடியதாக இவ்வியல் அமைந்துள்ளது. இரட்டைக்காப்பிய சமூகத்தில் அறச்சிந்தனைகள் வலியுறுத்தப்பட்டன. அத்தகைய அறச்சிந்தனைகள் இன்றும் மக்களிடையே பரவிக்காணப்படுகின்றன. காப்பியக் காலத்தில் கல்வியானது குருகுலக்கல்வியாக இருந்தது. இன்று மாணவர்களின் இல்லங்களுக்கே சென்று சேரக்கூடிய நவீன கல்விமுறை பின்பற்றப்படுவதை இவ்வியல் எடுத்துரைக்கிறது.

நீதித்துறையானது இரட்டைக்காப்பியக் காலத்தில் அனைவருக்கும் சமமாகவே வழங்கப்பட்டது தவறாக நீதி வழங்கிய காரணத்தினால் உயிர் துறக்கக்கூடிய தன்மை உடையவனாக மன்னன் காணப்பட்டான். ஆனால் இன்றைய சமூகத்தில் நீதித்துறையானது பணபலம் படைத்தவர்களுக்கு வளைந்துகொடுக்கக் கூடியதாகவே மாறியுள்ளது என்பதை சமூகம் அன்றும் இன்றும் என்ற இயல் வழி அறியமுடிகின்றது.

தொகுப்புரை

- உளவியல் நோக்கில் இரட்டைக்காப்பியப் பெண்மாந்தர்களின் உளவியல் என்னும் இவ்வாய்வில் தலைமைப் பெண் மாந்தர்களான கண்ணகியின் உளப்பாங்கானது மனவெழுச்சி காரணமாக மென்மைத்தன்மையிலிருந்து கடும் சீற்றம் கொண்டவளாக மாறிய தன்மைக்குறித்தும், கணிகையர் குலத்தில் பிறந்து வளர்ந்து, துறவறம் நோக்கிப் பயணிக்கும் மாதவீன் உளவியல் நிலைப்பற்றியும், மணிமேகலையின் செயல்பாட்டிற்கு உறுதுணையாக இருந்த ஊக்கியின் தன்மை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.
- துணைமைப் பெண்மாந்தர்களின் நுண்ணறிவு, ஆளுமைப்பண்பு, மனப்பான்மை, செயல்திறன், ஆளுமைத்தன்மைகள் ஆகிய உளவியல் பண்புகள் விளக்கப்பட்டுள்ளன.
- பிறப் பெண் மாந்தர்களின் நடத்தைக் கோட்பாடுகள், இரக்கவுணர்வு, மறுபிறப்பு போன்ற உளவியல் கூறுகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- இரட்டைக்காப்பியச் சமூகம் அன்றும் இன்றும் எத்தகைய மாற்றம் பெற்றுள்ளது என்பதும் ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளது.

பரிந்துரைகள்

"உளவியல் நோக்கில் இரட்டைக்காப்பியப் பெண்மாந்தர்கள்" என்னும் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது, பெண்மாந்தர்களின் நுண்ணறிவு, மனவெழுச்சி, மனப்பான்மைகள், நடத்தைக்கூறுகள் ஆகியவற்றை எடுத்தியம்புவதாக அமைந்துள்ளது. மேலும் இவ்வாய்வானது சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலையை அடிப்படையாகக் கொண்டு மேலும் பல ஆய்வுகளைச் செய்ய வழிவகுக்கும். சான்றாக,

- பெண்ணிய நோக்கில் இரட்டைக்காப்பியப் பெண்மாந்தர்கள்
- இரட்டைக்காப்பிய பெண்மாந்தர்களின் வாழ்வியல் விழுமியங்கள்
- இரட்டைக்காப்பிய பெண்மாந்தர்களின் ஆளுமைப்பண்புகள்

போன்ற தலைப்புகளிலும் ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.

ஆய்வுப்பயன்

உளவியல் நோக்கில் இரட்டைக்காப்பியப் பெண்மாந்தர்கள் என்னும் இவ்வாய்வானது காப்பிய காலப் பெண்மாந்தர்களின் எண்ணம், செயல், நடத்தை ஆகியவற்றை எடுத்துரைப்பதாக அமைகிறது. சூழ்நிலைக்கு ஏற்ப அவர்களின் எண்ணவோட்டமும் செயல்பாடும் அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது. பெண்மாந்தர்கள் தங்களது உணர்வுகளை வெளிப்படுத்தும் மெய்ப்பாடுகளை ஆராய வழிவகுக்கின்றது. இரட்டைக்காப்பிய பெண்மாந்தர்களின் செயல்பாடுகளுக்குக் காரணமான உளவியல் காரணிகளை ஆராய்வதே ஆய்வின் பயனாக அமைகிறது.